Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 19 இதழ் - 8 ஆகஸ்ட் - 2006



கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

## உங்கள் கவனத்திற்கு ...

கடந்த 1994 ஆம் ஆண்டு துவங்கி,

காங்கயத்தில் நடைபெற்று வரும்

**"எக்லீசியா வேதாகமக் கல்லூரி"** யின்

**மூன்று வருட பட்டப்படிப்பிற்கு**

தகுதியுள்ள மணமான, மணமாகாத ஆண்கள்

மற்றும் / வாலிபரிடமிருந்து விண்ணப்பங்கள்

உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

★ விவரம் 10ம் பக்கம் பார்க்கவும் ★

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. மனுஷ குமாரனாகிய கிறிஸ்து ........ 12
3. பெண்கள் பகுதி ........ 17
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 24
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
7. தேவனுடைய சித்தம் என்ன? ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 19** **AUGUST - 2006** **Issue - 8**


ஆசிரியர் உரை

## "எப்பாப்பிரோதீத்து"

எம் திருமறை ஆசான் இதழைத் திங்கள் தவறாமல் படித்துத் தியானித்து வரும் தெய்வபயமிகு வாசகர்களுக்கு, இவ்விதழைப் பற்றிய ஓர் உண்மை இந்நேரம் பளிச்சென விளங்கியிருக்கும். கடந்த பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, வருடம் ஒரு மாதம் என ஒதுக்கி சத்தமில்லாமல் ஒரு காரியத்தை சாதுரியமாகச் செய்து வந்திருப்பதே அது. ஆம், திருமறையின் பக்கங்களில் பரிசுத்த ஆவியானவரால் அழகாக அறிமுகம் செய்யப்பட்டு, வெகு நேர்த்தியாக வர்ணிக்கப்பட்டு, தொடு தூரத்தில் பல தேவ மனிதர்கள் வைக்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலான வேத விரும்பிகள், அவர்களை அந்நியர்களாகப் பாவித்து, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் வேண்டாவெறுப்பாக நடத்திப் புறம் தள்ளியே வைத்துள்ளனர். இது கண்டு மனம் வெதும்பிய ஆசான், இப்பாதகச் செயலுக்கு முடிவு கட்ட விரும்பி, வருடம் ஒரு மாணிக்கத்தைத் தேடிப்பிடித்து, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்களின் பக்திப் பண்புகளை ஊரும், உலகும் அறியச் செய்து வந்திருக்கிறது. அப்படிப் பட்டவர்களை, நீங்களும் விழி பிதுங்கிப் பார்த்து, நெஞ்சாரப் புகழ்ந்து, வாய் நிறைய வாழ்த்தியுள்ளீர்கள்.

இப்படிக், கடந்த வருடங்களில் மெருகூட்டப்பட்ட அந்த பத்தரை மாற்றுப் பக்தித் தங்கங்களை இன்னுமொருமுறை பட்டியலிட்டுக் காட்ட எனக்கு மனமிருந்தாலும், இதழில் இடமில்லை. அவர்களில், கடைசியாக கடந்த வருடம், இதே மாதத்தில் ஜொலித்தவன் "அரமனை விசாரிப்புக்

காரனாகிய ஒபதியா" இந்த ஒபதியாவின் அருமை, பெருமை கிறிஸ்தவ உலகில் எத்தனை பேருக்குத் தெரியுமென்று எனக்குத் தெரியவில்லை. பழைய ஏற்பாட்டுப் பக்தர்களைப் பட்டியலிடு என்று, ஒரு பழுத்த ஆன்மீகவாதியிடம் கேட்டால் கூட அந்தப்பட்டியலில் இந்த ஒபதியாவின் பெயர் இடம் பெறாது. ஆனால் இவனோ, பட்டியலில் இடம் பெறும் தகுதி கொண்டவர்கள் என்று நாம் சொல்லும் யாருக்கும் சளைத்தவனல்ல. ஆயினும், இவன், நம்மைப் போன்றவர்களால் கடந்த வருடம் வரை ஓரம் கட்டப்பட்டு வந்துள்ளான் என்பதே உண்மை.

இதே விதமாகத்தான், தேவ அநுக்கிரகம் பெற்ற பல புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் பலர், அதைப் படிப்பவர்களால் அலட்சியப் படுத்தப்பட்டு வருகின்றனர். அதாவது, அவர்கள் அறியப்பட வேண்டிய அளவுக்கு அறியப்படாமலும், அங்கீகரிக்கப்படாமலும் விடப் படுகின்றனர். ஒருவேளை, இவர்களெல்லாம் நம்மால் அடிக்கடி சலாம் போடப்படுகின்ற பேதுரு, பவுல், யோவான் போன்றவர்களுக்கு இணையானவர்களாகவோ, பிரபலமானவர்களாகவோ இல்லாம லிருக்கலாம். அதற்காக, இவர்களெல்லாம் ஏறெடுத்துப் பார்ப்பதற்கே லாயக்கானவர்களல்ல என்று தள்ளி வைப்பது நியாயமாகிவிடுமா? ஆவியானவர், நம்முடைய இப்படிப்பட்ட எண்ண ஓட்டத்தை ஏற்றுக் கொள்ளுவாரா? நிச்சயமாக மாட்டார்.

பட்சபாதமில்லாத தேவனை நாம் நம்முடைய வாழ்க்கையில் முழுமையாகப் பிரியப்படுத்த வேண்டுமானால், அவரால் வெளிப் படுத்தப்பட்டு, நன் முத்திரை குத்தப்பட்டுள்ள அனைவருக்கும் நாம் சம மதிப்பளித்து, அவர்களிடம் மண்டிக்கிடக்கும் அருங்குணங்களைத் தோண்டியெடுப்பது அவசியம். ஆகவே தான், இவ்வருடத்திற்கும் மாதத்திற்குமான வாய்ப்பு, நம்மால் அதிகம் கவனிக்கப்படாமலிருப் பவர்களில் ஒருவனாகிய **எப்பாப்பிரோதீத்துவுக்கு** கொடுக்கப்படுகிறது. இவன் எபேசு பட்டணத்தைச் சேர்ந்த ஏற்றமிகு **எப்பாப்பிராவும்** அல்ல (கொலோ 1:7, 4:12) பவுலின் விசுவாசக் குமாரர்களில் ஒருவனாகிய **தீத்துவுமல்ல.** ஆனால், இந்த இரண்டு பேருடைய பெயரை மாத்திரம் இணைத்தவனாகக் காணப்படாமல், அவர்களுடைய பக்தி லட்சணங் களையும் ஒருங்கே பெற்றவனாகக் காட்சியளிக்கிறான்.

இந்த எப்பாப்பிரோதீத்து ஒருவகையில் தேவ மனிதர்கள் எல்லோரைக் காட்டிலும் விசேஷித்தவனாக உள்ளான். அடியேன் இப்படி சொல்லுவதற்கு ஒரு சிறப்புக் காரணம் உள்ளது. எப்படியெனில், வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள பல தேவ மனிதர்களின் பெயருக்கான

பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், யாருடைய பெயருக்கும் **அழகானவன்** என்றோ அல்லது **வசீகரமானவன்** என்றோ பொருளில்லை. இவ்வகையில் இவன் தனித்து நிற்பவனாக உள்ளான். வசீகரமானவன் என்ற பொருளையுடைய இவன் சரீரத் தோற்றம் எப்படியிருந்ததோ நமக்குத் தெரியாது. ஆனால், இவனின் ஆவிக்குரிய தோற்றம், நிச்சயமாகவே வசீகரமுள்ளதென்பதில் யாருக்கும் எள்ளின் முனையளவும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை. அந்தளவு இவன் ஆவிக்குரிய ரீதியில் புடம் போடப்பட்டவனாக வசனங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளான்.

இப்படிப்பட்ட வசீகரம் கொண்ட எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து, நமக்கு அவசியமான பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தளவு நாம் முயற்சிக்கப் போகிறோம். ஆயினும், அதற்கு முன்பாக, நமது ஆசானின் ஆச்சாரப்படி, இவனைப் பற்றிய பின்னணிக் காரியங்களைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

இந்த எப்பாப்பிரோதீத்து, மக்கெதோனியா நாட்டுக் குடிமகன் அதைவிட அங்கிருந்த பேர் பெற்ற பிலிப்பு பட்டணத்துச் சபையின் புகழ்பெற்ற அங்கத்தினன். அப்போஸ்தலன் பவுலடியாரால் குறிப்பிட்ட குறை காணப்படாத, அவன் நெஞ்சுக்கு நெருக்கமான சபை பிலிப்பி பட்டணத்து சபை. இது, அவனுடைய இரண்டாவது நற்செய்திப் பயணத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டது (அப். 16 அதி). ஐரோப்பாக் கண்டத்தின் ஊழியத்திற்கு அச்சாரம் போட்டதே இச்சபைதான். தன்னுடைய, மூன்றாவது நற்செய்திப் பயணத்தின்போதும் இச்சபைக்கு இவர் சென்றுள்ளார் (அப். 20:6). இச்சபைக்கு எழுதப்பட்ட நிருபம் சிறை நிருபங்களுள் ஒன்று. பவுல், ரோமச் சிறையிலிருந்து எழுதின நிருபத்தை விசுவாசக்குமாரர்களில் ஒருவனாகிய தீமோத்தேயு, பிலிப்பு பட்டணத்துக்கு எடுத்துச் சென்றார். அதன்பிறகு, இந்த பிலிப்பு பட்டணத்துச் சபையார் சார்பாக, அவர்கள் கொடுத்தவைகளை எடுத்துக் கொண்டு, பிலிப்பியிலிருந்து ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டவன் தான் இந்த எப்பாப்பிரோதீத்து (பிலி 4:18).

இந்த அழகானவன் பற்றிய காரியங்களை அலசி எடுத்து ஆராய்வதற்கு, ஏராளமான வசனங்களில் இவனைப் பற்றிய தகவல்கள் இல்லையே என்று நாம் ஆதங்கப்பட வேண்டிய அவசியமில்லை. எப்படியெனில், பிலிப்பியர் நிருபத்தில் காணப்படும் ஏழு வசனங்களே, (2:25-30; 4:18), நம்முடைய தேவைக்கு அதிகம் என்றளவில் இவன் குறித்த காரியங்களும், கருத்துக்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வசனப் பகுதியில், பவுலடியார், ஆவியானவரின் துணை கொண்டு, மிகத் தேர்ந்த வார்த்தைகளால் இவனை அலங்கரித்துள்ளார். இந்த அழகானவனுக்கு, இவர்

கொடுக்கும் அலங்காரம் மேலும் மெருகூட்டி கண்ணைப் பறிக்க வைக்கிறதாகவே உள்ளது.

சுவிசேஷத்தினிமித்தம் ரோமச் சிறையிலிருக்கும் பவுலடியார் முதலில் தன்னைப் போன்ற மனதுடைய தீமோத்தேயுவை பிலிப்பு சபைக்கு அனுப்ப திட்டமிட்டார் (2:19-23). பிறகு வேண்டாம், வேண்டாம், நானே போவதே நல்லது என்று எண்ணினார் (2:24) ஒருவேளை தான் போவதற்கு அதிக நாள் பிடித்தால் நன்றாக இருக்காதே என்று மறுபடியும் யோசித்து, எப்பாப்பிரோதீத்துவை அனுப்ப முடிவு செய்தார் (2:25) அப்படி அனுப்ப முடிவு செய்தபோது, இந்த சகோதரன் பற்றிக் குறிப்பிடும்படியாக ஆவியானவர் பவுலை ஏவின வார்த்தைகள் அலாதியானவை. (25-30) இவன் பற்றிச் சொல்லப் பட்டவைகளுக்கு முத்தாய்ப்பாக இருப்பது, அவன் உயிரைப் பணயம் வைத்து ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்தினான் என்பது. தேவ சித்தத்தை நிறைவேற்ற உயிரைப் பணயம் வைத்தவர்கள் என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். அவர்களில் ஒருவன் தான், நம்முடைய எப்பாப்பிரோதீத்து.

சரி, இப்பொழுது இவனிடமிருந்து பாடம் கற்றுக்கொண்டு நம்முடைய ஆன்மீக வாழ்வை பலப்படுத்தும் முயற்சியில் இறங்குவோம்.

**I ஆன்ம சிந்தையும், ஊழிய வைராக்கியமும் கொண்டவன் (வச 25a)**

ஆவிக்குரிய வசீகரம் கொண்ட நம்முடைய எப்பாப்பிரோ தீத்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், இவன் ஆவியின் சிந்தையும், ஊழிய வைராக்கியமும் கொண்டவன் என்பது.

வசனம் 25ஐக் கவனியுங்கள். பவுலடியார் இவனை, **என் சகோதரனும், உடன் வேலையாளும், உடன் சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும்,** என் குறைச்சலுக்கு உதவி செய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை உங்க ளிடத்தில் அனுப்ப வேண்டுமென்று எண்ணினேன்" என்கிறார். கர்த்தருடைய சபையிலிருக்கும் ஒரு கிறிஸ்தவனைப் பற்றி இதற்கு மேலும் பொருள் தரும்படி ஏதாவது சொல்லமுடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த வசனத்தின் முற்பகுதி எப்பாப்பிரோதீத்து பற்றிய 3 முக்கிய ஊழியப் பண்புகளை நமக்குச் சொல்கிறது. இந்த மூன்றுமே இவனுடைய ஆவியின் சிந்தையையும் ஊழிய ஈடுபாட்டையும் நமக்குப் பறைசாற்றுகிற தாகவே உள்ளது.

பவுலடியார் முதலாவது இவனை சகோதரர் என்கிறார். இந்த வார்த்தையைப் பவுலடியார் நம்மில் அநேகர் பொத்தாம் பொதுவில் யாரெல்லாம் தேவன்மீதும், கிறிஸ்துவின் மீதும் நம்பிக்கையுடையவர்களா யிருக்கிறார்களோ அவர்களெல்லாருக்கும் பயன்படுத்துவது போல பயன்படுத்தாமல், தன்னைப்போலவே, அவனும் ஞானஸ்நானத்தின் மூலம்

பாவங்கள் கழுவப்பட்டு, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவனாக (கலா 3:26,27) இருக்கிறபடியால் பயன்படுத்தியுள்ளார். இவ்வார்த்தையை நாம் மிகச் சரியாகப் பயன்படுத்துவது சத்தியவார்த்தைகளின்படி மிகவும் அவசியம்.

அடுத்து, இவனை, உடன் வேலையாள் என்கிறார். அதாவது, இவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து "ஒரு சகோதரன்" என்ற அளவோடு நில்லாமல், அதைக்கடந்து ஊழியக் காரியங்களில், ஆத்தும ஆதாயப் பணியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கிறான். கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக இருக்கும் எல்லோரும் உடன்வேலையாளாக இருப்பதில்லை. இவனோ, உடன் வேலையாளாகவும் இருந்துள்ளான். இவ்வார்த்தையை, தீமோத்தேயு, (ரோம 16:21), தீத்து (II கொரி 8:23) போன்ற உத்தம குமாரர்களுக்கே ஆவியானவர் பயன்படுத்தியுள்ளார். அதே அலங்கார வார்த்தை இந்த அழகானவனுக்கும் உடுத்தப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

இன்னும், இவன் உடன் சேவகனாகவும் இருந்துள்ளான். இது உடன் வேலையாள் என்ற நிலையையும் கடந்த ஒன்று. உடன் வேலையாளாக இருக்கும் எல்லோரும் நல்ல சேவகர்களாக இருப்பதில்லை (II தீமோ 2:3,4) ஆனால், இவன் போராட்டக் குணம் நிறைந்த, கிறிஸ்துவுக்காக வெற்றி பெற்றே தீரவேண்டுமென்ற வைராக்கியமுடையவனாக இருந்துள்ளான். இது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் இருக்க வேண்டிய அத்தியாவசிய பண்பு. இந்தப் பண்புள்ளவர்களுக்கே நீதியான கிரீடம் கிடைக்கும் (II தீமோ 4:7). வெறுமனே நானும் கிறிஸ்தவனென்று சொல்லி நாட்களை ஒப்பேற்றிக் கொண்டிருப்பவர்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால், இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான வர்களே, நாங்களும் கிறிஸ்தவர்களென்றும் அதுவும் பரம்பரைக் கிறிஸ்தவர்களென்றும், சத்தியத்தை உண்மையாய் நேசிக்கிற வர்களென்றும் சொல்லுகிற நம் ஒவ்வொருவருடைய நிலையும் ஊழியக் காரியங்கள் எந்தளவு உள்ளது?

எப்பாப்பிரோதீத்து போல, நாம் புதிய ஏற்பாட்டு நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம், அதாவது விசுவாசித்து (மாற் 16:16) மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (ரோம 10:9,10) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு, கிறிஸ்துவுக்கும், உண்மைக் கிறிஸ்தவர்களுக்கும் சகோதரர் என்ற நிலையை எட்டி விட்டோமா? அதன் பிறகு, எப்பாப்பிரோதீத்து போல உடன் வேலையாள் என்ற அந்தஸ்தை அடைந்து, உடன் சேவகன் என்ற உயர்வையும் பெற்றுவிட்டோமா? சொல்லுங்கள். ஒருவேளை உங்களுடைய பதில் இல்லை என்பதாயிருந்தால், இன்றே நம்முடைய எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளுவோம்.

**II சபையாரின் ஏகோபித்த நம்பிக்கையையும், அன்பையும் பெற்றவன் (வச 25b)**

ஆவிக்குரிய அழகு கொண்ட நம்முடைய எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், ஒட்டுமொத்த சபையாரின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்றவனாக இருந்துள்ளான் என்பது.

இருபத்தைந்தாம் வசனத்தின் பிற்பகுதி அவனை பற்றிச் சொல்லும் காரியங்களைக் கவனியுங்கள். " **உங்கள் ஸ்தானாபதியும், என் குறைச்சலுக்கு உதவி செய்தவனுமான எப்பாப்பிரோதீத்து.....**" என்றுள்ளது. ஒரு ஸ்தானாபதி என்பவன் பிறருக்காகச் செயல்படுகிறவனாயிருக்கிறபடியால், சம்பந்தப்பட்டவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவனாயிருக்க வேண்டுவது அவசியம். நம்முடைய இயேசு இரட்சகர் பிதாவின் ஸ்தானாபதியாக இப்பூமியில் செயல்பட்டிருக்கிறார் (எபி 3:1) அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக செயல்பட்டுள்ளனர் (அப். 1:21-23). இதிலிருந்து, ஸ்தானாபதி என்ற பொறுப்பு, எவ்வளவு நம்பிக்கைக்குரியது என்பது விளங்கும். ஆம், அதற்குண்டான முழு தகுதியுள்ளவர்களிடம் மாத்திரமே கொடுக்கப்படும். இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கைக்குரிய பொறுப்பு, நம்முடைய எப்பாப்பிரோதீத்துவுக்கு பிலிப்பி சபையாரால் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

நாம் வாழும் இந்த நாட்களில், நம்பிக்கை என்பது சமுதாயத்தில் மாத்திரமல்ல, சபைகளிலும் அற்றுப்போன ஒன்றாகவே உள்ளது. பொருளாதார காரியத்திலும் சரி, ஒரு பொறுப்புக்குண்டான பணியை நிறைவேற்றுகிற முறையிலும் சரி, சம்பந்தப்பட்டவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பதில்லை. சபைகளிலிருக்கும் பிரச்சினைகளுக்கும், சபையின் வழக்குகளுக்கும், நம்பிக்கைக்குறைவே பெரும்பாலும் அடிப்படையாக உள்ளதென்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஒருவேளை, யார் எப்படியிருந்தாலும், இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சபையில் நம்பிக்கைக்குக் பாத்திரமாக நடந்து கொள்ளத் தீர்மானிப்போம்.

அடுத்து, பவுலடியார் இவன் பற்றி, என் **குறைச்சலுக்கு உதவி செய்தவன்** என்கிறார். யாரெல்லாம் பிறருடைய பிரச்சினைகளைப் புரிந்து, பிறருடைய உணர்வுகளை மதிக்கிறார்களோ அவர்களால் மட்டுமே மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும். பிரச்சினையிலும், வேதனையிலும் சிக்கி இருக்கும் ஒருவனைப் பார்த்தும், பாராமலும் செல்லும் ஒருவன் உதவி என்ற வார்த்தையின் வாசனையை அறியாதவனாகவே இருப்பான். ஆனால் எப்பாப்பிரோதீத்துவுக்கு, ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டியக் குணமும் இருந்துள்ளது.

வசனம் 26-ல் பவுலடியார், இப்படி தன் குறைச்சலுக்கு உதவி கொண்டு வந்த எப்பாப்பிரோதீத்துவை அனுப்புவதற்கான காரணம் பற்றி என்ன கூறுகிறார் பாருங்கள். அவன் **உங்களெல்லார் மேலும் வாஞ்சையுள்ளவனும்**, தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான் என்று பவுலின் இவ்வார்த்தைகள் பிலிப்பு பட்டணத்து சபையாருக்கும், இவனுக்கும் இருந்த நெருக்கத்தை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஆம், **சபையார் எல்லார் மீதும் இவனுக்கு வாஞ்சையாம்**. கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் அனைவரையும் இவன் எப்படி சமமாகப் பாவித்து நேசித்துள்ளான் பாருங்கள். நாமெல்லாம் சபையிலிருக்கும் ஒருவரை நேசிப்பதற்கு அவன் படித்தவனா, வசதியுள்ளவனா, சொந்தக்காரனா, ஜாதிக்காரனா, மொழிக்காரனா என்றெல்லாம் காரணம் தேடி அலைகிறோமல்லவா அப்படி அவன் காரணம் தேடவில்லை. என்னைப் போல அவனும் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப் பட்டவன், ஆகவே, நான் அவனை நேசிக்கிறேன் அவ்வளவு தான் என்பதே அவன் பாணி. இப்பாணி தான் சபையின் இன்றைய அவசர தேவை. இந்தப் பரலோக பாணியை நானும், நீங்களும் பின்பற்றாதவரை, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் என்பதில் பொருள் இருக்காது.

இதை விட மேலாக அன்பானவர்களே, நம்மால் நினைத்தே பார்க்க முடியாத ஒரு பண்பும் இவனிடம் காணப்பட்டுள்ளது. இவன் வியாதிப் பட்டதை சபையார் அறிந்ததினிமித்தம், இவன் வியாகுலப்பட்டுள்ளான் (வச. 26). இவன் வியாதியின் தன்மை பற்றி வசனம் 27, மரணத்திற்குச் சமீபமான வியாதி என்று கூறுகிறது. அப்படியானால், அது எவ்வளவு சரீர வேதனையையும், மனவேதனையையும் கொடுக்கக்கூடியதாக இருந்திருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. பொதுவாக அந்த நிலையில், பிறரைப் பற்றி நினைக்க மனமிருக்காது. ஒருவேளை, இரத்தக் கலப்பான தன் குடும்பத்தைப் பற்றி, மனைவி, மக்களைக் குறித்து வேண்டுமானால் நினைக்கலாம். அதைத்தாண்டி சிந்தையைச் செலுத்துவது மிகக் கடினம். ஆனால், இவனோ, இவன் வியாதியை பிலிப்பு சபையார் அறிந்து கொண்டதினிமித்தம் வியாகுலப்பட்டிருகிறான். மரண வேதனையைக் காட்டிலும், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் தன்னைப் பற்றிக் கவலைப் படுவார்களே என்ற கவலை இவனை அதிகம் வாட்டியிருக்கிறதென்றால், இவனுடைய கிறிஸ்தவ அன்பின் ஆழத்தைப் பாருங்கள்! அதுவும் இவன், கவலை என்ற நிலையைத் தாண்டி **வியாகுலம்** என்ற எல்லைக்குச் சென்றுள்ளான். வியாகுலம் என்ற வார்த்தை விசேஷமானது. ஆம், கிறிஸ்து சிலுவைக்கு முன்பாக, கெத்சமனே தோட்டத்தில் அடைந்த வேதனைக்கும், பட்டபாடுகளுக்கும் அடையாளமாக ஆவியானவர் பயன்படுத்திய வார்த்தைதான் "வியாகுலம்" (லூக். 22:44, மத். 26:37) இவ்வார்த்தையின் பொருள் அளவைக் கடந்த துக்கம்.

அப்படியானால், அருமையானவர்களே, இவனுடைய கிறிஸ்தவ அன்பின் தன்மையைத்தான் பாருங்களே! நாமெல்லாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் இப்படியா சக கிறிஸ்தவர்கள் மீது அன்பு செலுத்துகிறோம்? அவர்கள் படும்பாடுகளில் இப்படியா பங்கடைகிறோம்? சொல்லுங்கள் இவ்வருடம் எப்பாப்பிரோதீத்துவை தேவன் ஒரு நோக்கத்தோடு கொடுத்திருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகையால், நாம் ஒவ்வொருவரும், இந்த எப்பாப்பிரோதீத்து போல, சபையாரின் ஒட்டு மொத்த நம்பிக்கையையும், அன்பையும் பெற்றவர்களாகவும், பாரபட்ச மில்லாமல் சபையாரை நேசிக்கிறவர்களாகவும், சபையாருக்காக நம்மையே தியாகம் செய்ய விருப்பமுடையவர்களாகவும் இருப்போமாக!

**III சபையாரின் கனத்திற்கு பாத்திரவானாயிருந்தான் (2:29)**

ஆவிக்குரிய அழகு கொண்ட நம்முடைய எப்பாப்பிரோ தீத்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், அவன் பிலிப்பு பட்டணத்து சபையாரின் கனத்திற்குப் பாத்திரவானாயிருந்தான் என்பது.

வசனம் 29-ல் பவுலடியார், "ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக் கொண்டு, இப்படிப்பட்ட வர்களைக் கனமாய் எண்ணுங்கள்" என்று கூறியுள்ளார்.

இதே பவுலடியார், கனம் சம்பந்தமாக ரோமாபுரியாருக்கு எழுதும்போது, கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் என்று (ரோம 12:10) சொல்லியுள்ளார். ஆனால், இங்கோ, அதே பவுலடியார் ஆவியானவரின் துணை கொண்டு, இவனைக் கனம் பண்ணுங்கள் என்று கூறுகிறார். இதன் பொருள் இவன் யாரையும் கனம் பண்ணத் தேவையில்லை. இவனை எல்லோரும் கனம் பண்ண வேண்டுமென்பதல்ல. மாறாக, இவனுடைய வாழ்க்கையும், ஊழிய காரியங்களும் மற்ற எல்லாரைக் காட்டிலும் தனித்தும், உயர்ந்தும் நிற்பதால், இவன் சிறப்பான கனத்திற்குப் பாத்திரவானாயிருக்கிறான் என்று எடுத்துச் சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டில், கனமானது, பிதாவாகிய தேவன் (1தீமோத் 1:17) அவருடைய குமாரன் கிறிஸ்து (யோவா 5:23) தவிர பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாலும் (எபே 6:2), முதியோர்களுக்கு இளையவர்களாலும் (1தீமோ 5:1,3), மூப்பர்களுக்கு விசுவாசிகளாலும் (1தீமோ 5:17) கொடுக்கப்பட வேண்டுமென்று உள்ளது. ஆனால், இவன் சபையில் முதியோனுமல்ல, மூப்பனுமல்ல, இருப்பினும், ஆவியானவர் இவன் கனப்படுத்தப்பட வேண்டுமென்று கூறுகிறார்.

இங்கே, தேவன் ஆவியானவரைக் கொண்டு, இவன் கனத்திற்குரியவன் என்று வெறுமனே கூறாமல், அதற்கான காரணத்தையும் வெளிப்படுத்தி விளக்கியுள்ளார். ஏனெனில், **நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்** (வச. 30). தேவன் யாரைக் கனப்படுத்துகிறாரென்று பாருங்கள். கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒரு குறைவு, அந்தக் குறைவை நிவர்த்தி செய்ய வேண்டியது, பிலிப்பு சபையாரின் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதில் சிரமம். எப்படியெனில், அந்தக் காலகட்டத்ததில் பிலிப்பு பட்டணத்திலிருந்து ரோமாபுரிக்கு கடல் பயணம் என்பது ஆபத்துக்களை உள்ளடக்கியது. சபையார் எல்லோருக்கும் போக விருப்பமிருந்தாலும் ஆபத்துகளை எண்ணி பயம், தயக்கம், ஆனால், இவன் தன் உயிரைத் துச்சமென மதித்து பிரயாணத்தை மேற்கொண்டான். அதினிமித்தம் பிராணன் போகுமளவு வியாதி. ஆயினும், சோர்ந்து போகவோ, கிறிஸ்தவப் பண்புகளை இழக்கவோ இல்லை. அப்பப்பா! இவனுக்குத் தான் கனம், தேவனால் விளங்குகிறதா?.

ஆனால், இன்றைக்கு நிலைமை எப்படி? கிறிஸ்துவுக்காகவோ, கிறிஸ்துவின் ஊழியத்துக்காகவோ, கிறிஸ்துவின் சபைக்காகவோ எந்த ஒரு துரும்பையும் எடுக்கக் கூடாது, ஆனால், கனம் மாத்திரம் வேண்டும்! அதுவும் எப்படி, நான் ஆரம்பகால அல்லது நீண்ட கால அங்கத்தினன், வயதில் மூத்தவன், காணிக்கை நிறைய கொடுப்பவன், அதிக வருமானம் ஈட்டுபவன், மேல் சாதியைச் சேர்ந்தவன் என்று இப்படி ஏதாவது சொல்லி, ஆகவே, நான் கனப்படுத்தப்படவேண்டுமென்கிறனர். இந்தத் தகுதிகளைப் பார்த்தா தேவன் எப்பாப்பிரோதீத்துவைக் கனப்படுத்தினார். இல்லை, இல்லவே இல்லை.

அருமையானவர்களே, நீங்கள் தேவனாலும், தேவனுடைய சபையாலும் கனப்படுத்தப்பட வேண்டுமென்று விரும்பினால், நம்முடைய எப்பாப்பிரோதீத்து போல, செம்மையான மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, சபையின் நம்பிக்கை பெற்று, தன்னிலும் அதிகமாக சபையாரை நேசித்து, கிறிஸ்துவின் சபைக்காகவும், கிறிஸ்துவின் ஊழியத்துக்காவும் உயிரைக் கொடுத்து வேலை செய்யுங்கள். அப்பொழுது, தேவன் உங்களை கனப்படுத்துவார்.

அன்பானவர்களே, நம்மால் இதுகாறும் கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு கவனிக்கப்படாமல் இருந்த இந்த எப்பாப்பிரோதீத்துவிடமிருந்து, தேவன் கொடுத்திருக்கும் பாடங்களை மறுக்காமல் கற்று, சாட்சியுள்ளதொரு வாழ்க்கை வாழ நம்மை ஒப்புக் கொடுப்போமாக! ஆமென்.

*S. ராஜநாயகம்*

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration : 3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : +2 தேர்ச்சி (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification : +2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree : B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**இயக்குநர்**

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபும் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்

## எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# ஒன்பதாம் வேதாகம கருத்தரங்கம்

# NINTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 2,3 - 2006**
**(திங்கள், செவ்வாய்** ஒரு நாள் அரசு விடுமுறை)

நேரம் : **திங்கள் காலை 9.00 - மாலை 5.00 மணி வரை**
**செவ்வாய் காலை 9.00 - 12.30 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

பேச்சாளர்கள் : **தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

தொடர்பு முகவரி


## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

# மனுஷ குமாரனாகிய கிறிஸ்து

கிறிஸ்துவைப் பற்றியும், அவரைக் குறித்து பிரசங்கிப்பது பற்றியும் நாம் தொடர்ந்து படிக்கப்போகிறோம். நாம் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டுமானால், அவர் யார் என்றும், இவ்வுலகிற்கு அவர் வந்த நோக்கம் பற்றியும், அவருடைய போதனை குறித்தும் மற்றும் பல விஷயங்களையும் நாம் அறிந்து வைத்து, அவைகளை குறித்து, நம்மை கேட்கிறவர்களிடம் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

இம்மாதம், நம் பாடத்திற்காக கிறிஸ்துவை மனுஷ குமாரனாக பார்க்கப்போகிறோம். நாம் சென்ற மாதம் பார்த்தபடி, கிறிஸ்துவை பல முறை நாம் தேவ குமாரன் என்றழைக்கும் வசனங்களை குறித்துப் பார்த்தோம். அவர் தேவ குமாரனென்று அழைக்கப்படும் நோக்கமே, அவர் பரலோகத்திலுள்ள பிதாவை விட்டு, அற்புதவிதமாக ஸ்திரீனிடத்தில் மனுஷ சாயலாகப் பிறந்தார். அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரனென்று அழைக்கப்படுகிறார். கிறிஸ்து சொல்லும்போது, "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று". (யோவ. 3:18) ஆகவே, அவர் தேவனிடத்திலிருந்து வந்ததாலும், பரிசுத்த ஆவியினால் பிறந்ததாலும், பூமிக்குரிய தகப்பன் இல்லாமல் பிறந்ததாலும் அவர் தேவ குமாரனென்று அழைக்கப்படுகிறார். அதே நேரத்தில், வேதாகமம் அவரை மனுஷ குமாரன் என்றும் அழைக்கிறது. அவர் மனுஷகுமாரனாகயிருந்தால் அவரை ஏன் தேவ குமாரன் என்றும் அழைக்கிறோம்?. அவர் ஏன் தேவகுமாரனென்று அழைக்கப்படுகிறார் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம், ஆனால், அவர் மனுஷ குமாரனென்று அழைக்கப்படுவதற்குக் காரணம் அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். அவர் மனுஷ சாயலாக பிறந்தார் என்பதினால் தான். வேதாகமம் அவரைக் குறித்துச் சொல்லும்போது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவராகிய அவரை தேவன் அனுப்பினார் (கலா. 4:4), தேவன் தனது குமாரனை பாவமாம்சத்தின் சாயலாக இப்பூமிக்கு அனுப்பினார் (ரோ. 8:3).

இப்பொழுது நாம் கிறிஸ்துவை மனுஷ குமாரனென்று குறிப்பிடும் சில வசனங்களை கவனிப்போம். இவ்வுலக ஆதாயத்திற்காக தன்னைப் பின்பற்ற முன்வந்த வேத பாரகனைப் பார்த்து இயேசு கூறும்போது, ".....நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்" (மத்தேயு 8:20). சுகவீனமான ஒருவனுக்கு பாவத்தை மன்னித்து சுகம் கொடுத்த போது, ஏன் அப்படிச் செய்தீர் என்று அவரை பார்த்து கேட்ட பொழுது, இயேசு,

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக் காரனை நோக்கி, நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மாற்கு 2:10,11). வரப்போகிற தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து தன் அப்போஸ்தலனிடம் விஷயங்களை எடுத்துக் கூறும்போது, மற்றவை களோடு, அவர் அவர்களை நோக்கி, "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப் படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்; மனுஷ குமாரன் வருவதற் குள்ளாக நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டணங்களையெல்லாம் சுற்றி முடியாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 10:23).

இயேசுவும், அவருடைய சீஷர்களும் பயிர்வழியே நடந்து போகையில், அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்வதைக் குறித்து பரிசேயர்கள் குற்றம்பிடித்த போது, இயேசு அவர்களை நோக்கி, "மேலும் மனுஷ குமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" என்றார். (லூக்கா 6:5) இயேசு சொல்லும் போது, எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத்தேயு 12:32) களைகளைப்பற்றிய உவமையை தனது சீஷர்களுக்கு இயேசு விளக்கும்போது, "... நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்" (மத்தேயு 13:37) மீண்டும் அவர் சொல்லுகையில், "ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" என்றார் (மாற்கு 8:38). தான் காட்டிக் கொடுக்கப்படும் நேரததைக் குறித்து, இயேசு தனது சீஷர்களிடம் சொல்லும்போது, "நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள்; மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படப்போகிறார்" என்றார் (லூக்கா 9:44) வேறொரு சமயத்தில் இயேசு தனது சீஷர்களைப் பார்த்து, "மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங் களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்" என்றார் (மத்தேயு 19:28). இயேசு தனது இரண்டாம் வருகையின் நேரத்தைக் குறித்து பேசும்போது, அப்பொழுது, மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். "அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" என்றார் (மத்தேயு 24:30).

கிறிஸ்து தனது வருகையின் நோக்கத்தைப் பற்றி கூறும்போது, இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் என்றார் (லூக்கா 19:10). சுவிசேஷத்தை பிரசங்கித் ததற்காக ஸ்தேவான் கல்லெறிபட்டு மரிக்கும் தருவாயில், "....பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு; அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்றான் (அப். 7:55,56). இறுதியாக, அப்போஸ்தலனாகிய யோவான் கர்த்தருடைய வருகையை பற்றி சொல்லும்போது, "பின்பு, பரலோகத்திலிருந்து, ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று. பின் நான் பார்த்தபோது, இதோ வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக் கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற் கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக் கிறதையும் கண்டேன். அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத் திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி, பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால், உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது மேகத்தின் மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின் மேல் நீட்டினார். பூமியின் விளைவு அறுப்புண்டது (வெளி. 14:13-16).

நாம் இதுவரை கண்ட எல்லா வசனங்களிலும் ஒன்று பொதுவாக சொல்லப்பட்டிருப்பதை நாம் காணலாம். இது யாதெனில் கிறிஸ்து மனுஷ குமாரனாக பேசப்படுவது தான். அவ்வசனங்களுள் பல வசனத்தில் கிறிஸ்து தன்னை மனுஷ குமாரன் என்று சொன்னதை நாம் காணலாம். ஆகவே, கிறிஸ்துவை மனுஷ குமாரன் என்று சொல்வது ஒரு ஏற்புடைய விளக்கம் தான் என்பது புலப்படுகிறது. மீண்டும், அது அவருடைய மனுஷிகத்தை குறிக்கிறது. அதாவது அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்து, மாம்சத்தில் வாழ்ந்து, நம்மைப்போல் உணர்வுகளை கொண்டவராக வாழ்ந்து, சிலுவையில் நமக்காக மரிப்பதைக் குறிக்கிறது.

இயேசு இவ்வுலகில் வந்து, ஒரு மனிதனாக வாழ்ந்து, மனிதனின் உணர்வுகளை அவரும் கடந்து உணர்ந்து இருந்தாலும், கிறிஸ்து தேவ குமாரன் என்கிற உண்மையை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. இவ்வுலகத்தில் வாழ்ந்து, அதன் கஷ்டங்களை உணர்ந்து, அதன் தேவைகளை அறிந்து இருப்பது என்றால் என்ன என்று கர்த்தர் அறிந்திருக்கிறார் என்று மனிதன் புரிந்து கொள்ள இது உதவுகிறது. அதே போல, கிறிஸ்துவும் மனித குலத்தின் மீது தனது அன்பை காட்டும் விதமாக, அவனின் பிரச்சனையின்

தன்மையை உணரவும், சுகவீனமானவர்களை சொஸ்தமாக்கவும், முடவர்களை நடக்கச் செய்யவும், குருடர்களுக்கு பார்வை கொடுக்கவும், ஊமைகளின் வாயைத் திறக்கவும், மரித்தோரை உயிரோடு எழுப்பவும் செய்து, இறுதியில் மனித குலத்திற்காக பாடுபட்டு, இரத்தம் சிந்தி, சர்வலோகத்தின் பாவத்திற்காக கல்வாரி சிலுவையில் மரிக்கவும் செய்தார்.

மத்தேயு 4 ஆம் அதிகாரத்தில், இயேசுவானவர் தன் பிதாவோடு தனித்திருக்கும்படி வனாந்திரமான ஓர் இடத்திற்குப் போனார் என்றும், அப்பொழுது அவரை சோதிக்க பிசாசானவன் வந்தான் என்றும் காண்கிறோம். இயேசுவானவர் மிகவும் சோர்ந்திருக்கும் போது சாத்தான் அவரை சோதிக்கும்படி அவரிடம் வந்தான். முதலாவது, கற்களை அப்பங்களாக்கி சாப்பிட்டு திருப்தியாகும் என்று அவரிடம் அவன் கூறினான். ஆனால், நமது ஆண்டவர், மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். அவன் வேத வாக்கியத்தை மேற்கோள் காட்டினாலும், தேவன் நமக்கு ஏற்படுத்தும் காரியத்திலிருந்து நம்மை காப்பாற்ற தேவ தூதர்களை அனுப்புவேன் என்று வாக்கு செய்யவில்லை. பிசாசானவன் அதை தவறாக அந்த வேத வாக்கியத்தை பயன்படுத்தியிருக்கிறான். மீண்டும் நமது ஆண்டவர் அவனைப் பார்த்து, "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறரே" என்றார்.

இறுதியாக சாத்தான் அவரை மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, தன்னை சாஷ்டங்கமாய் விழுந்து பணிந்து கொள்ளும்படி சொன்னான், அப்படிச் செய்தால் இவைகளையெல்லாம் அவருக்குத் தருவதாகச் சொன்னான், அதற்கு அவர், "அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்". அப்பொழுது, பிசாசு அவரை விட்டு ஓடிப்போனான். இவை அனைத்திலும் நாம் பார்க்கும்போது, மாம்சத்திலிருந்த கிறிஸ்து சாத்தானை மேற்கொள்ள முடியும் என்று நிரூபித்துக் காட்டினார். எபிரெய ஆசிரியர் கிறிஸ்துவைப் பற்றி கூறுகையில் "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிராதன ஆசாரியரே நமக்கிருக்கிறார்" என்கிறார் (எபி. 4:15) மீண்டுமாக அவர் கூறுகையில், "ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படு கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" என்கிறார் (எபி. 2:18). ஆகையால், பவுல் கூறும்போது, நமது சோதனையில் தப்பித்து கொள்ளும் போக்கை அவர் உண்டுபண்ணுவேன் என்கிறார் (1கொரி. 10:13).

வேதாகமத்தின் அநேக வசனங்களை நாம் மேற்கோள் காட்டி கிறிஸ்துவின் மனுஷிகத்தை பற்றி அநேக காரியங்களை படிக்கலாம். ஆனால், அதற்கு இடம் நமக்குப் போதாது. ஆண்டவரின் சிலுவை மரணத்தைப் பற்றி நான் உங்களுக்கு நினைப்பூட்ட ஆசைப்படுகிறேன். அவர் அந்த சிலுவையை மிகுந்த வியாகுலத்துடன், வேதனையுடன் சந்தித்தார், ஆனால், அதைவிட மேலாக சர்வலோகத்தின் பாவத்தையும் அந்த சிலுவையில் அவர் சுமந்து தீர்த்தார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இவைகளை எல்லாம் நான் சார்ந்திருக்க மாட்டேன் என்று தன் பிதாவிடம் அவர் கூறியிருக்கலாம், ஆனால், அவரோ தன் பிதாவுக்கு தன்னை கீழ்ப்படுத்தி இவ்வுலகத்தின் பாவத்திற்காக தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

நாம் அந்த சிலுவையைப்பற்றி சிந்திக்கும் போதெல்லாம், நம்மை ஒருவர் நேசித்ததின் நிமித்தமாக, நமக்காக ஒருவர் மனிதனாக வாழ்ந்து மனிதனின் உணர்வுகளை புரிந்ததின் நிமித்தமாக, சர்வலோகத்தின் பாவமும் நிவிர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக அவை அனைத்தும் செய்து முடிக்கப்பட்டது என்று நாம் சோர்ந்து போகும் வேளையில், நாம் நேசிக்கப்படாத வேளையில், நமக்காக ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் எண்ணிப்பார்ப்போம் (1பேதுரு 5:7).

கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவரை தேவ குமாரன் என்றோ அல்லது மனுஷ குமாரன் என்றோ மாத்திரம் நினைக்கிறீர்களா? அவர் மனுஷ குமாரனாகவும், தேவ குமாரனாகவும் அதற்கும் மேலாகவுமிருக்கிறார் என்பதை எண்ணிப்பாருங்கள். நம்மை இரட்சிக்கும்படி தேவனிடத்திலிருந்து அவர் வந்தார். ஆகவே அவர் நமது இரட்சகராகவும், மீட்பராகவும், கர்த்தராகவும் இருக்கிறார். அவரே நமது நம்பிக்கை.

அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படி, விசுவாசிக்கும்படி, அவருடைய போதனைக்கு கீழ்ப்படியும்படி ஊக்கப்படுத்துகிறேன். அப்படி நீங்கள் செய்தால், அவர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்ப்பார். அவர் சொன்னார், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; ..." என்றார் (மாற். 16:16) எவ்வளவு எளிய போதனை பாருங்கள். நீங்கள் அதை செய்வீர்களா? இதில் எதாவது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் எங்களுக்கு எழுதுங்கள் கர்த்தர் உங்களை விசாரிக்கிறார், நாங்களும் உங்களுக்கு உதவி செய்வோம். நீங்கள் உங்களைக்கர்த்தருக்கு கீழ்ப்படுத்துவீர்கள் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

**J.C. Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# பெண்களின் பணி

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து வேதத்திலிருந்து சில ஆலோசனைகளை கற்றுக் கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். கிறிஸ்தவ பெண்களாகிய நாம் சபைக்கென்று செய்யும் பணிகள் பற்றி சற்று படிப்போம்.

***உபசரிப்பு என்பது ஒரு தகுதியான பணி : -***

"முறு முறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" (I பேதுரு 4:9). உபசரிப்பு விஷயத்தில் ஒரு பெண் தனித்தன்மையைப் பெற்றிருக்கிறாள். இவள் நினைத்தால் யாரையும் தன் வீட்டில் ஏற்று, உதவி செய்யலாம். உபசரிக்க வேண்டும் என்று தேவன் கட்டளை கொடுத்திருக்கிறார். "சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்தார்கள்" என்று நாம் வாசித்திருக்கிறோம். பெண்களாகிய நாம் இதற்கு கைகொடுக்கா விட்டால் நம் கணவன்மார்கள் தனித்து இச்செயலை செய்ய முடியாது. உபசரித்தல் வேலை ஒரு பெரிய ஆசீர்வாதமான வேலை. "இன்றைக்கு என் வீட்டில், நாளைக்கு உன் வீட்டில்" என்ற அடிப்படையில் உபசரிப்பு இருக்ககூடாது. அந்நியர், புதிதாக வருபவர்கள், கர்த்தருடைய தாசர்கள், வியாதியஸ்தர் இப்படி பார்த்து அவர்களை அன்போடு உபசரிக்க வேண்டும். எந்தெந்த வகையிலெலாம் உதவலாம் என்று சமயம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். மட்டுமல்லாமல், நம் பிள்ளைகளுக்கும் இந்த உபசரிப்பு என்ற அரிய குணத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

***வீடு சந்திப்பு என்பது மற்றொரு முக்கியமான பணி :***

பல சபைகளில் இந்த வேலை முக்கியமாக பெண்களால் வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டுள்ளது. அதிக நேரம் கிடைப்பதாலும், இவர்களால் சுலபமாக சென்றடைய முடியும் என்பதாலும் பெண்களுக்கு இது மிகவும் ஏற்ற வேலை. பரலோகத்தின் தேவன் இவர்களுடைய இந்த வேலைக்கு பலனை அளிப்பார். கிறிஸ்துவுக்காக பெண்களை ஆதாயம் செய்வதற்கு தனியாகச் சென்று சந்திப்பது மிகவும் பெலனுள்ளதாக இருக்கும். புதிய ஆத்துமாக்களை அழைத்து வருதல், அவர்களை உற்சாகப்படுத்தும்படி அடிக்கடி வீட்டிற்குச் சென்று சந்தித்தல் போன்ற காரியங்கள் பெண்களால் செய்யப்படும்போது அது சபையின் வளர்ச்சிக்கு பெரிய உதவியாய் இருக்கும்.

மேலும் விசுவாசத்தில் பெலவீனமாய் இருப்பவர்களை சந்தித்தல் என்பது இன்னும் விசேஷமானது. வியாதியில் இருப்பவர்களை சந்திக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே வர இயலாதவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஏதாவது சிறு அன்பளிப்பு, பண்டம் வாங்கிக் கொடுத்து நம் அன்பை தெரிவிப்பது போன்றவைகளால் அவர்களையும் தெம்பூட்டச் செய்து நாங்கள் இருக்கிறோம், கவலைப்படாதீர்கள் என்று சொல்லுவது பெரிய ஆறுதலை கொடுக்கக் கூடியதாக அமையும். அதைப்போலவே வயதானவர்கள் இழப்பில் தவிப்பவர்கள், குறையில் இருப்பவர்கள் இப்படிப்பட்டவர்களை நாம் சந்திக்கும் போது தேவன் அதில் பிரியப்படுவார்.

***<u>ஆலோசனை வழங்குவது என்னும் சிறப்பான பணி</u>***

இளகிய மனதும், இரக்க சுபாவமும் கொண்ட பெண்களுக்கு ஆலோசகர்களாக இருப்பதும் சுலபமான காரியம்தான். விழுந்து போனவர்களுக்கு உதவி செய்து அவர்களை எழும்பப் பண்ணுவது ஒவ்வொரு கிறிஸ்தவர்மீதும் விழுந்த கடமை சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். கலா : 6:1. என்று வாசிக்கிறோம். இந்த வேலையை செய்வதற்கு நாம் சம்பந்தப்பட்ட சகோதரியின் வீட்டிற்குச் சென்று நம் சொந்த அறிவை பயன்படுத்தி பேசாமல், வேத வாக்கியங்களிலிருந்து ஆலோசனை கொடுக்க வேண்டும். நம் சொந்த கருத்தை கூறுவதென்பது "குருடனுக்கு குருடன் வழிகாட்டுவதுபோல்" இருக்கும் சபையில் உள்ள மூத்த சகோதரிகள் இளைய சகோதரிகளுக்கு எல்லா வகையிலும் புத்தி சொல்ல வேண்டும்.

மேலும் சபையில் என்னென்ன வேலைகள் உள்ளது என்பதை கேட்டு அறிந்து அதில் நம்மை ஈடுபடுத்தலாம். சபை கூடி வரும் இடத்தை சுத்தம் செய்ய வேண்டும். ஞாயிறு பள்ளி வகுப்புகளை நடத்த முடிந்தவர்கள் முன்வந்து நடத்தலாம். படித்த வாலிபப் பெண்கள் படிக்க முடியாத தாய்மார்களுக்கு வசனம் கற்றுக் கொடுக்கலாம். ஞானஸ்நானத்தின் போது உபயோகப்படுத்தும் துணிகளை சுத்தம் செய்து பத்திரமான இடத்தில் வைக்கலாம். சிறிய வேலையாய் இருந்தாலும் தானாக முன் வந்து செய்யும் போது தேவன் அதை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அருமையான சகோதரிகளே, நாம் இவ்வாறு சிறிய வேலைகள் சபைக்கென்று செய்யும்போது நாம் சில காரியங்களை மனதில் கொண்டு

செயல்பட வேண்டும் நம்மை நாமே பெரிதுபடுத்திக் காட்டிக் கொள்ள கூடாது. கிறிஸ்துவ அன்போடு காரியங்கள் செய்யப்பட வேண்டும். கர்த்தருக்காக வேலை செய்யும்போது நான், என்ற கௌரவம் பார்க்க கூடாது. கிறிஸ்து முதல், மற்றவர்கள் இரண்டாவது, மூன்றாவது நான் என்ற எண்ணத்தை சகோதரிகளாகிய நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த வேலையாயிருந்தாலும் முழுமனதோடும், முழு பெலத்தோடும் செய்ய வேண்டும். தாழ்மை, சாந்தம், அன்பு இவைகள் எப்போதும் நம் கூடவே இருக்கும்படியாக பார்த்துக் கொள்ள வேண்டும். மனிதர்கள் புகழ வேண்டும், பாராட்ட வேண்டும் என்று நினைத்து காரியமாற்றக் கூடாது. மற்றவர்களுக்கே தெரியாமல் நாம் செய்யும் நல்ல செயல்கள்தான் பரலோகத்தில் நமக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும். எது சரியாய்ப் படுகிறதோ அதை முழுபலத்தோடே செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். சபையிலும், சமுதாயத்திலும் தேவைகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் சந்தர்ப்பங்கள் நம்மை தேடி வந்து கொண்டேதான் இருக்கின்றன. தேவன் கொடுக்கும் முழுபலத்தோடே அவருக்காக பணி செய்வோம்.

**ரேச்சல்நாயகம்**

## தேவனுடைய நாமங்களும், பண்புகளும்

1. யேகோவா - இருக்கிறவராகவே இருக்கிறேன்
2. ஏல் ஏலியோன் - உன்னதமான தேவன்
3. எல்ஷடாய் - சர்வவல்லமையுள்ள தேவன்
4. யேகோவாயீரே - கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்.
5. அடோனாய் - கர்த்தர், எல்லாவற்றையும் ஆளுகிறவர்
6. யேகோவா ஷாலோம் - சமாதானம் தருபவர்
7. யேகோவா ஷம்மா - கர்த்தர் அங்கே இருக்கிறார்.

வாலிபர் பகுதி

# தேவன் வாலிபர்கள் ஞானவான்களாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப நெஞ்சங்களே உங்கள் யாவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி வரவேற்கிறேன். பொதுவாக வாலிபர்களாகிய நமக்கு அறிவை எப்படியாவது சம்பாதிக்க வேண்டும், ஞானவான்களாக வேண்டும் என்ற தணியாத அவா தொன்று தொட்டே இருந்து வருகிறது. அறிவைப் பெருக்கிக் கொள்ள அநேக வழிகள் கிடைப்பதும் இந்த வாலிபப் பருவத்தில் தான். வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது ஏதேன் தோட்டத்தில் பிசாசானவன் சர்ப்பத்தின் உருவத்தில் வந்து தேவனால் தடைசெய்யப்பட்ட அந்த கனியைப் புசித்தால் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்று ஏவாளையும், ஆதாமையும் வஞ்சித்தான். ஆதாமும், ஏவாளும் அறிவை அடைவதற்காகவே சாத்தானிடம் ஏமாந்து போனார்கள். (ஆதி 3:4-6). தேவன் வாலிபர்களாகிய நாம் அறிவில் சிறந்து விளங்க வேண்டும், ஞானவான்களாகயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், நாம் எப்படிப்பட்ட அறிவை உடையவர்களாயிருக்க வேண்டும் என்றும் தேவன் தம்முடைய பரிசுத்த வாக்கியங்களில் சொல்லியிருக்கிறார். சரி, வசனங்களின்படி யார் ஞானவான்? ஒருவன் தன்னுடைய ஞானத்தை எப்படிக்காட்டுகிறான் என்று நாம் பார்ப்போம்.

**I ஞானவான் தன்னுடைய நல்நடத்தையின் மூலமாக ஞானத்தைக் காட்டுகிறான் :**

யாக்கோபு ஆசிரியர் கூறும்போது உங்களில் ஞானியும், விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன் என்று ஞானவானைப் பற்றி சொல்கிறார். இந்த வசனத்தின் மூலமாக உண்மையான ஞானம் சாந்தத்தோடே சேர்ந்து வருகிறது என்பதை நாம் கற்றுக் கொள்கிறோம். அதிகப் படிப்புகளைப் படித்த அநேகர் இந்த சாந்த குணம் இல்லாமல் இருக்கிறார்கள் அவர்கள் ஞானிகள் அல்ல என்று யாக்கோபு ஆசிரியர் சொல்கிறார். ஏனென்றால், அதிகம் படித்த அநேகருக்கு கர்வமும், மேட்டிமையும் தான் இருக்கும் சாந்த குணத்தை விலைக்குக் கேட்டாலும் தருவதற்கு அவர்களிடத்தில் இருக்காது. 1கொரி (3:18-20) வசனங்களை நாம் வாசிக்கும்போது ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால்

அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது. அப்படியென்றால் இந்த உலகத்தின் ஞானம் நமக்கு அவசியமில்லையென்று அர்த்தம் அல்ல, நாம் இந்த உலகத்தில் வாழும் வரை நமக்கு நிச்சயமாக இந்த உலகத்தின் ஞானம் அவசியம்தான் ஆனால், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் நாம் வளர வேண்டும் அப்போது தான் ஆவிக்குரிய அறிவை நாம் பெற முடியும். ஏனென்றால் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு என்று சாலொமோன் ஞானி சொல்கிறார் (நீதிமொழிகள் 9:10). மேலும் ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் என வேதம் சொல்கிறது. ஆனால், மதியீனர் ஆலோசனைக்குச் செவி கொடுப்பதில்லை. ஆலோசனையும், மெய்ஞானமும் என்னுடையவைகள் என்று தேவன் சொல்கிறார். (நீதிமொழிகள் 8:14).

**II <u>ஞானவான் பயந்து தீமைக்கு விலகுகிறான்</u>**

ஞானவான் தீமை என்ன செய்ததென்றும், அது என்ன செய்யும் என்றும் அறிந்து, பாவத்தின் வஞ்சனையையும் அறிந்து அதை விட்டு விலகுகிறான் (எபிரெயர் 3:13). பக்தனாகிய யோபு சொல்லும் போது பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்கிறார். பெற்றோர்களை கனப்படுத்துபவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது (நீதிமொழிகள் 13:1). வேதபாரகரும், பரிசேயர்களும் அதைத் தவிர்க்கப் பார்த்தபோது இயேசு அதைக்கண்டித்தார் (மத் 15:4-6). மேலும் சாலொமோன் ஞானி சொல்லும்போது தன் உதடுகளை அடக்குகிறவன் ஞானவான் என்று சொல்கிறார். ஏன் உதடுகளை அடக்க வேண்டுமென்றால் சொற்களின் மிகுதியில் பாவமிருக்கும். புதிய ஏற்பாட்டில் பேதுரு ஆசிரியர் சொல்லும் போது ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத்தன் நாவையும், கபடத்துக்குத்தன் உதடுகளையும் விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். (1பேதுரு 3:10). நாம் நாவை அடக்குவதன் மூலமாக பொய், சாபம், கெட்ட வார்த்தைகள், ஏமாற்று, வசனிப்பு போன்ற பாவங்களை நாம் தவிர்க்க முடியும். எனவே தான் சங்கீதகாரன் கர்த்தாவே என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும் என்று ஜெபிக்கிறார் இதுவே நம்முடைய அனுதின ஜெபமாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் எவனோ அவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது. (மத்தேயு 7:24-27). இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் வசனங்களை அதிக ஆர்வமாகக் கேட்கிறார்கள் ஆனால், அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான். சில வாலிபர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள் கேட்டவுடன் போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும், ஐசுவரியத்தினாலும், சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு கேட்ட வசனத்தின்படி நடவாமல் போகிறார்கள். ஆனால், இந்த சாக்கு போக்குகளையெல்லாம் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். நம்முடைய பெரும்பாலான பிரச்சனைகளெல்லாம் வாழ்க்கையின் முதன்மையான நோக்கத்தின் தவறான புரிந்து கொள்ளுதலின் அறிகுறிகள் தான். வேத வசனங்களை நாம் கேட்பது மாத்திரம் போதுமானதல்ல, அதன்படி நாம் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷமானது வசனத்தை கேட்கிறவர்களையும் அதற்கு கீழ்ப்படிபவர்களையுமே ஆசீர்வதிக்கிறது. (எபிரெயர் 5:8,9).

**III ஞானவான் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறான்:**

நீதிமொழிகள் 11:30ன் படி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். இது உண்மையிலேயே மிக ஞானமான காரியம் ஏனென்றால், இயேசு கிறிஸ்து ஒரு ஆத்துமாவின் மதிப்பைப் பற்றிப் பேசுகிறார். மத்தேயு 16:26ல் மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் என்று கேள்விக் கேட்கிறார். இந்த கேள்வி நம்மை உருவக்குத்தக்கூடிய ஒரு கேள்வியாகும். ஏனென்றால் பண ஆசைப் பிடித்த சமுதாயத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆத்துமாவானது ஒருவர் கொண்டிருக்கும் எல்லா உடைமைகளைக் காட்டிலும் விலை உயர்ந்ததாகும். மனிதர்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாக்க அநேகப் பைத்தியமான காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால், விலையுயர்ந்த ஆத்துமாவுக்கென்று எதுவும் செய்வதில்லை. அநேகர் சில அற்பமான காரியங்களுக்காக விலையுயர்ந்த ஆத்துமாவை இழந்துபோகிறார்கள். மோசே அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதில் விருப்பமாயிருக்கவில்லை. ஆனால், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான் (எபிரெயர்

11:25,26). மோசேக்கு இருந்த அந்த மனப்பான்மையை நாமும் உடையவர்களாயிருக்க வேண்டும். பிரியமான வாலிப நெஞ்சங்களே! எந்தச் சூழ்நிலையிலும் நாம் நம்முடைய ஆத்துமாவை இழந்து விடக் கூடாது. எனவேதான் வேதாகமம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் என்று கூறுகிறது. ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவே நம்முடைய அருமை இரட்சகர் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொன்னார். (தானியேல் 12:3ல்) நாம் வாசிக்கும் போது அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாலிப நெஞ்சங்களே! கிறிஸ்துவுக்காக நீங்கள் எத்தனை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியிருக்கிறீர்கள்? நம்முடைய அருமை இரட்சகரை சந்திக்க வெறுங்கையுடன் போக வேண்டுமா? அல்லது ஒரு ஆத்துமாவைக் கூட ஆதாயப்படுத்தாமல் மற்றவர்களுடைய இரத்தப்பழியை உங்கள் கையில் சுமந்து கொண்டு நியாயத் தீர்ப்பு நாளில் தேவனுக்கு முன்பாக நிற்க போகிறீர்களா? எனவே பிரியமான வாலிப நெஞ்சங்களே தேவனுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம் ஞானவான்களாவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**BENNY MARTIN**

## யோவான் கடத்தப்பட்ட பத்மு தீவு

1. கிரேக்க நாட்டுத் தீவுகளில் சிறிய தீவு
2. 10 மைல் நீளம், 6 மைல் அகலம், 18 சதுர மையில் விஸ்தாரம் கொண்டது.
3. 800 அடி உயரமானது
4. 1951–ன் கணக்குபடி ஜனத்தொகை 2613 பேர்
5. யோவானின் காலத்தில் நாடு கடத்தப்பட்ட குற்றவாளிகள் வைக்கப்பட்ட தீவு.

சிறுவர் பகுதி

# யூதா ராஜா சிங்கம்



அன்புமிக்க சின்னதம்பி, தங்கைகளே,

நம் நாடு சுதந்திரம் பெற்ற இம்மாதத்தில், உங்கள் எல்லோரையும் சிங்கத்தின் வழியாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிங்கம் என்றாலே சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரும் பயப்படுவர். காட்டிலே வாழும் பெரிய யானைகள் முதல் சுண்டெலி வரை எல்லா மிருகங்களுமே பயந்து ஓடும். நாமெல்லாம் சிங்கத்தை சர்க்கஸ்ஸிலே தான் பார்த்திருப்போம். அப்படித்தானே.


அப்படி சிங்கத்தை பார்க்கப் போகும்போது என்ன செய்வோம்? அப்படியே நடுங்கிக் கொண்டு கம்பி வேலிக்குப் பின்பாக நின்று கொண்டு, அது உறுமிக் கொண்டு அங்குமிங்கும் போவதை அப்படியே கண்ணை உருட்டி வேடிக்கை பார்ப்போம்.

ஆனால், வேதாகம நாட்களில் நிலைமை அப்படி இல்லை. தலைகீழாக இருந்தது. சிங்கங்கள், நம்ம ஊரில் ஆடு, மாடு, நாய் திரிவது போல் சர்வ சாதாரணமாக நடமாடின. மக்கள் கவனமாக இருந்து, அவைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. தாவீது ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது, சிங்கங்களிடமிருந்து அவைகளைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. (1 சாமு 17:34-36). தாவீது தன் ராணுவத் தளபதியாக, சிங்கங்களை ஜெயித்தவனைக் கொண்டிருந்தான் (சாமு 23:20) வேறொரு தீர்க்கதரிசி, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, சிங்கத்தால் கொல்லப்பட்டார் (1 ராஜா 13:26) சிங்கம் எப்படி என்று பார்த்தீர்களா?

இப்படிப்பட்ட சிங்கங்கள் கடுமையான தாக்குதலின் சின்னமாக விளங்கியது. அப்போஸ்தலனாகிய பேதுரு சக கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது "பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை

விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" எனவே அவனிடமிருந்து உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள் என்று ஆசியா மைனரில் உள்ள சக கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (1பேது 5:8). வலிமைப் பெற்ற சிம்சோனுக்கும் சிங்கத்தின் வலிமை மீது ஒரு தனி மரியாதை இருந்தது (நியா 14:18). யாக்கோபு தன்னுடைய குமாரர்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தபோது யூதாவை அவர் ஒரு வல்லமையான ராஜ்யத்தை ஸ்தாபிக்க வரப்போகும் ஒரு பாலசிங்கமாக வர்ணிக்கிறார். (ஆதியாகமம் 49:9,10). இந்த தீர்க்கதரிசனமானது நிறைவேறிவிட்டது. ஏனென்றால், தெற்கு ராஜ்யத்தைப் பிரதிநிதிப்படுத்திய யூதா கோத்திரமானது வடக்கு ராஜ்யத்தின் மற்ற கோத்திரங்களை விட நீடித்த நாட்கள் இருந்தது.

இந்த யூதா கோத்திரத்தில் தான் இயேசு பிறந்தார் (எபி 7:14) நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக அவர் மரித்தார் பின்பு தேவனுடைய வலது பரிசத்தில் இருந்து கொண்டு என்றென்றும் ஆளுகை செய்வதற்காக உயிர்த்தெழுந்தார். (மாற் 16:19). அந்த மகா பெரிய வெற்றியில் "யூதாச்சிங்கம்" என்ற பட்டத்தை வென்றார் (வெளி 5:5) இப்படி வலிமையுள்ள ஒரு தேவனுடைய குமாரனால் பரலோகத்தில் கிறிஸ்தவர் களுக்கு நித்திய வீடு தருவதாக வாக்குத்தத்தம் செய்ய முடிந்தது. இந்த நித்திய வீடு செல்ல, சிறுபிள்ளைகளாகிய நாம் இந்தச் சின்ன பிராயத் திலிருந்தே ஆர்வம் காட்ட வேண்டும். (மனன வசனம். யோவான் 14:2)



இது ஆசியச் சிங்கம் - தாவீது தன்னுடைய நாட்களில் இவ்வகையானச் சிங்கத்தை அறிந்திருப்பார். இந்த ஆசியச் சிங்கமானது ஆப்பிரிக்கச் சிங்கங்களோடு ஒத்திருக்கிறது. ஆனால் இரண்டு வகைச் சிங்கங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் இந்த ஆசியச் சிங்கத்தின் பிடரிமயிர் சிறியதாக இருக்கும். இன்று இந்த வகைச் சிங்கம் நம் நாட்டிலுள்ள "கிர்வனத்தில்" மட்டுமே காணப்படுகிறது.

***R. Abel Rodger Nayagam***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

முதலாம் நூற்றாண்டில் மனம் மாற்றம் அடைந்தவர்கள் ஞானஸ்நானத்திற்குப் பிறகு எந்த சபையில் சேர்க்கப்பட்டார்கள், எப்படி தேவனை ஆராதித்தார்கள் என்ற தலைப்பில் நாம் பாடங்களைப் படித்து வருகிறோம். சபையானது தேவனுடைய அநந்த நோக்கத்தில் இருந்து வந்தது என்று நாம் பார்த்தோம். அது பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு முதல் நூற்றாண்டில் சமீபித்திருந்தது.

மாற்கு 9:1ல் இயேசு ராஜ்யம் அல்லது சபையைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை தெரிந்து கொள்வதற்காக அந்த வசனத்தை படிக்கும்படியாக நான் அழைப்பு விடுத்திருந்தேன். நம்முடைய அருமை இரட்சகர் அந்த வசனத்தில் என்ன சொன்னார் என்பதைப் பற்றி நாம் இந்த மாதம் மறுபடியும் நம்முடைய மனதிற்குக் கொண்டு வருவோம்.

மாற்கு 9:1யை வாசியுங்கள் இயேசு இந்த வார்த்தைகளை முதல் நூற்றாண்டில் இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் சொன்னார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் மிக முக்கியமான ஒன்று நடைபெறுவதற்கு முன்பு மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று தெளிவாக சொன்னார். என்ன நடக்கும்? சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடு வருவதைக் காண்பார்கள்.

மத்தேயு 16:18,19 வசனங்களில் நாம் படித்தபடி ராஜ்யம், சபை போன்ற வார்த்தைகள் ஆவிக்குரிய சரீரத்தைக் குறிப்பதற்காக இயேசுவால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, சிலர் தங்கள் வாழ்நாளிலே ராஜ்யத்தைக் காண்பார்கள் என்று இயேசு சொன்னதில் வேறொரு முக்கியமான காரியம் இருப்பதைக் கவனியுங்கள். சிலர் சபை பலத்தோடே வருவதைக் காண்பார்கள் என்று சொன்னார். எனவே இதை நிச்சயத்துடன் உறுதி செய்ய, முதல் நூற்றாண்டில் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது தேவனுடைய பலம் அல்லது வல்லமை நிரூபிக்கப்பட்டதை நாம் வசனங்கள் மூலம் ஆராய்வோம். லூக்கா 24:46-49 யை வாசியுங்கள் இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் தாம் பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது என்று நினைவுப்படுத்தினார். அதன் பிறகு சில நாட்களிலேயே மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் தம்முடைய நாமத்தினாலே அதாவது அவருடைய அதிகாரத்தினால் பிரசங்கிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் இயேசு அந்த விசுவாசம், அவருக்குள் இருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்தல் மற்றும் ஞானஸ்நானம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். மாற்கு 16:15, 16; மத் 28:18-20; மத்தேயு 10:32,33 அந்த செய்தி எதுவரை பிரசங்கிக்கப்பட வேண்டும்? அது சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று இயேசு சொன்னார்.

எங்கேயிருந்து அவருடைய சீஷர்கள் மனந்திரும்புதலுக்கும், பாவ மன்னிப்புக்குமான செய்தியை பிரசங்கிக்கத் தொடங்குவார்கள்? அது எருசலேமிருந்து என்று நம்முடைய கர்த்தர் உறுதிப்படுத்தினார். தம்முடைய சீஷர்கள் அதற்கு சாட்சிகளாயிருக்கிறார் என்று இயேசு சொன்னார். இவைகள் என்றால் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் அவர்கள் இயேசுவின் மரணத்தையும், உயிர்தெழுதலையும் தனிப்பட்ட முறையிலே நேரடியாகக் கண்டபடியால், தாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் மற்றவர்களிடம் சாட்சியாக சொல்வார்கள்.

ஆனால், அதற்கு முன்பு என்ன நடக்கும்? கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் என்ன செய்யும்படியாகச் சொன்னார்? இயேசு அவர்களை எருசலேமில் காத்திருக்கும்படியாகச் சொன்னார். எதுவரை அவர்கள் காத்திருக்க இயேசு விரும்பினார்? உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை.

மாற்கு 9:1ல் ராஜ்யம் அல்லது சபை பலத்தோடே முதல் நூற்றாண்டில் வரும் என்று நம்முடைய அருமை இரட்சகர் சொன்னார். இப்போது லூக்கா 24:46,49ல் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் அந்த வல்லமையை எருசலேமில் பெறுவார்கள் என்று சொன்னார். அந்த வல்லமையைப் பற்றி தேவன் என்ன வெளிப்படுத்தியிருக்கிறார் என்று ஆராய்வோம்.

அப். 1:8யை வாசியுங்கள் அப்போஸ் 1 ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தின்படி நம்முடைய இரட்சகர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர்கள் எதைப் பெறுவார்கள் என்று இயேசு சொன்னார்? பெலன் !! அந்த பெலன் எப்போது வரும்? பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களிடத்தில் வரும்போது!.

பரிசுத்த ஆவி மூலமாக அவர்கள் அந்த பெலனைப் பெற்றப்பிறகு அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் இயேசுவுக்கு சாட்சிகளா யிருப்பார்கள் அதாவது அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து கண்டவைகளையும், கேட்டவைகளையும் சாட்சியாக அறிவிப்பார்கள்.

அப்போஸ்தலர்கள் எங்கே அல்லது எந்த இடத்திலிருந்து அந்த பெலனைப் பெறுவார்கள், எந்த இடத்திலிருந்து இயேசுவைப் பற்றிய சாட்சியை தொடங்குவார்கள்? எருசலேமிலிருந்து நம்முடைய எஜமானைப் பற்றி எருசலேமில் சாட்சி கொடுத்த பிறகு வேறெங்கே சாட்சிகளா யிருப்பார்கள்? யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பார்கள். அதாவது, அவர்கள் கர்த்தரிடத் திலிருந்து கண்டவைகளையும், கேட்டவைகளையும் சாட்சியாக அறிவிப்பார்கள்.

அப்போஸ்தலர்கள் எங்கே அல்லது எந்த இடத்திலிருந்து அந்த பெலனைப்பெறுவார்கள், எந்த இடத்திலிருந்து இயேசுவைப் பற்றிய சாட்சியை தொடங்குவார்கள்? எருசலேமிருந்து நம்முடைய எஜமானைப் பற்றி எருசலேமில் சாட்சி கொடுத்த பிறகு வேறெங்கே சாட்சிகளா யிருப்பார்கள்? யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பார்கள்.

லூக்கா 24:46-49ல் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எங்கே பிரசங்கிக்கப்படும் என்று இயேசு சொன்னார்? சகல தேசத்தாருக்கும் எவ்வளவு அழகாக எல்லா வசனங்களும் ஒன்றாக இணைந்து ஒரே காரியத்தைப் பேசுகிறது என்று பார்க்கிறீர்களா? இந்த வசனங்களில் நம்முடைய அருமை இரட்சகர் சொன்ன காரியங்களை நாம் சுருக்கமாக பார்ப்போம்.

1. முதல் நூற்றாண்டில் அவர் பேசிக்கொண்டிருந்த மக்களில் சிலர் மரிப்பதற்கு முன்பு ராஜ்யம் அதாவது சபை பலத்துடன் வரும்.

2. இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

3. அவருடைய சாட்சிகள் அவருடைய அப்போஸ்தலர்கள் மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் எருசலேம் தொடங்கி பிரசங்கிப்பார்கள்.

4. இயேசுவின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவி அவர்களிடத்திலிருந்து வரும்போது பெலனடைவார்கள்.

இது நம்முடைய நான்காவது கேள்விக்கு பதில் அளிக்க வகை செய்கிறது. அந்த கேள்வி என்னவென்றால் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது? அந்த சபையானது இயேசு பரமேறின சில நாட்களிலேயே முதல் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டது.

அப். 1:12யை வாசியுங்கள் இயேசுவின் அப்போஸ்தலர்கள் இயேசு கட்டளையிட்டபடியே எருசலேமுக்குப் போனார்கள்.

அப்போஸ் 1:26; 2:1 ஆகிய வசனங்களைப் படியுங்கள் இயேசு அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே பெந்தெகொஸ்தே நாளிலே அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு எருசலேமிலே கூடினார்கள்.

அப் 2:2-4யை நாம் வாசிக்கும்போது இயேசு ராஜ்யம் அல்லது சபை பலத்துடன் வரும் என்று சொன்னதின் நிரூபணத்தை நாம் காணமுடியும். இங்கே நாம் ஆவி பலத்துடன் ஊற்றப்படுவதை நாம் வாசிக்க முடியும், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் இதற்கு முன்பு எப்போதுமே கற்றிராத பாஷைகளில் பேச பெலனைக்கொடுத்தார். எனவே இயேசுவின் ராஜ்யம் அதாவது அவருடைய சபை பெந்தெகொஸ்தே நாளில் சுமார் கி.பி. 30ல் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்று நாம் திட்டமாக முடிவுக்கு வரமுடியும். அப் 2:14யை வாசியுங்கள் அந்நாளில் கூடியிருந்த மக்களிடம் பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினான்.

அப் 2:24-32ல் நாம் வாசிக்கும்போது பேதுரு தானும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் சாட்சிகளாயிருக்கிறோம் என்று சொன்னார்.

அப் 2:33-36ல் நாம் வாசிக்கும் போது நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்றும் அவரை தேவன் தம்முடைய வலது பரிசத்தில் உட்காரும்படிச் செய்தார் என்றும் பேதுரு தைரியமாகப் பிரசங்கம் பண்ணினார்.

அப். 2:37யை வாசியுங்கள் அந்த கூட்டத்தில் இருந்த சிலர் தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டு தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். இவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

அப் 2:38ல் நாம் வாசிக்கும்போது இயேசு கட்டளையிட்டபடி பேதுரு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானத்தையும் பற்றி பிரசங்கித்தார்.

அப் 20 : 41ல் நாம் வாசிக்கும்போது, பேதுரு இன்னும் அநேக வார்த்தைகளுடன் மக்கள் இரட்சிக்கப்படும்படியாக வலியுறுத்தினார் பேதுரு பிரசங்கித்தவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப் 2:47யை வாசியுங்கள் இங்கே இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். இரட்சிக்கப் பட்டவர்கள் எல்லாம் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் தான். சுவிசேஷத்தைக் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டு, இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, தங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பெற ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் எங்கே சேர்த்தார்? தேவனால் ஏவப்பட்ட ஆசிரியர் சொல்லும்போது இரட்சிக்கப் பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார் என்று சொல்கிறார். இது கிறிஸ்துவின் சபை பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் சுமார் கி.பி. 30ல் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை எந்தவித சந்தேகமுமின்றி உறுதிப்படுத்துகிறது. இதைத்தான் மாற்கு 9:1ல் இயேசு ராஜ்யம் பலத்தோடே வரும் என்று சொன்னார். ஏனென்றால், அப்போஸ்தலர்களிடத்தில் பரிசுத்த ஆவி வந்தபோது அவர்கள் பெலனடைந்தார்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் இன்னும் அநேகக் காரியங்களை அடுத்த மாதம் படிப்போம். அதுவரை இந்த கேள்வியைப் பற்றி யோசியுங்கள். கர்த்தர் உங்களை அந்த மெய்யான சபையிலே சேர்த்தாரா? பெந்தெகொஸ்தே நாளிலே அந்த ஜனங்கள் செய்தவைகளை நீங்கள் செய்யவில்லை என்றால் கர்த்தர் உங்களை அவருடைய சபையிலே சேர்க்கவில்லை. ஆனால், அவர்கள் செய்த காரியங்களை நீங்கள் செய்த நிமிடத்திலேயே அவர் அந்த ஆவிக்குரிய சரீரத்தில் உங்களை சேர்த்துக்கொள்வார். அவருடைய சபையில் சேர்க்கப்பட நம்முடைய அருமை இரட்சகருக்கு கீழ்ப்படிய உங்களுக்கு உதவ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

**BENNY** **CHARLIE DIPALMA**

# தேவனுடைய சித்தம் என்ன?
# WILL OF GOD

தேவனுடைய சித்தம் என்பது - தேவனுடைய திட்டம் அல்லது விருப்பம் என்பதை வேத வசனங்களின் வழியாய் அறிந்து கொள்ளலாம்.

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். வானத்திலும், பூமியிலும் நம்முடைய கண்களால் காணக்கூடியவைகளையும், காணக்கூடாதவைகளையும் உண்டாக்கினார். அவைகள் எல்லாவற்றையும் தேவன் தமது சித்தத்தின்படி அவருடைய வார்த்தையினால் உண்டாக்கினார். (2பேதுரு. 3:5).

தேவன் மனுஷனை பூமியின் மண்ணினால் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். அவனை தேவ சாயலாக உண்டாக்கினார். பின்பு தேவன் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்டதினால் அவனுக்கு ஏற்ற துணையாக மனுஷியை உண்டாக்கினார். இப்படி உண்டாக்கப்பட்ட யாவையும் தேவன் தம்முடைய சித்தத்தின்படியே செய்திருக்கிறார். எனவே, அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். **"கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவர் யார்? தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய வழிகள் (திட்டங்கள்) ஆராயப்படாதவைகள்!"** (ரோமர் 11:33).

சகலமும் அவராலும், அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக (ரோமர் 11:36).

எனவே, வானத்திலும், பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்கு சித்தமானதையெல்லாம் செய்கிறார் (சங். 135:6) ஆம் வானத்திலும், பூமியிலும் சமுத்திரங்களிலும் அதின் ஆழங்களிலும் தேவன் தம்முடைய சித்தத்தின்படி உண்டாக்கின அதிசயங்களை மனுஷன் அறிந்து கொள்ளும்போது அது அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் பிரம்மிப்பையும் உண்டு பண்ணுகிறது. ஆனாலும், அவைகளை குறித்து தேவனுடைய திட்டம் என்ன? நமது ஆண்டவர் இயேசு கூறுகிறார். வானமும், பூமியும் ஒழிந்துபோம் (மத். 24:35) அப்படியானால், தேவன் அவைகளை உண்டாக்கினதின் திட்டம் என்ன? உண்டாக்கப் பட்டவைகளினாலே தேவனுடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகளை மனுக்குலம் அறிந்து கொள்ளும்படி அவைகள் மூலமாக

தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்துவது தேவனுக்கு சித்தமாயிருக்கிறது என்ற பவுல் கூறுகிறார். (ரோ. 1:119-20).

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை வெளிப்படுத்துகிறது (சங். 19:1) அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார். (யோபு. 26:7)

எனவே, கர்த்தர் யோபுவோடு சம்பாஷித்த போது அவனைப் பார்த்து கேட்டார். நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? அதற்கு அளவு குறித்தவர் யார்? அதில் மேல் நூல் போட்டவர் யார்? அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக் கல்லை வைத்தவர் யார்? நீ அறிவாளியானால், அதை அறிவி என்றார். (யோ. 38:4-6). அவர் பூமியின் கடையாந்திரங்களிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றைத் தமது பண்டச்சாலையிலிருந்து புறப்படப்பண்ணுகிறார் (சங். 135:7) கரைபுரண்டு ஓடும் வெள்ளம் கடலில் கலந்தாலும், அதற்கு எல்லையைக் குறித்து, அதற்கு தாழ்பாள்களையும், கதவுகளையும் போட்டு; இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக் கடவது என்று சமுத்திரத்தின் எல்லையை ஏற்படுத்தினார் கர்த்தர் (யோபு 38:10-11) அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய் சமுத்திரத்தை குலுக்குகிறவரும் தேவனாகிய கர்த்தர் (ஏசா. 61:16) இவை யாவற்றையும் தேவன் தம்முடைய சித்தத்தின்படியே செய்கிறவராய் இருக்கிறார். பிரம்மிக்கத்தக்க இந்த அதிசயங்கள் மனுக்குலம் அறிந்து கொள்ளத்தக்கதாக தேவன் வேதாகமத்தை தந்தருளினார். ஆனால், மனுஷரோ இவ்வளவு வல்லமையும் பராக்கிரமும் கொண்ட தேவனை அறிந்து அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தைகளிலே வீணராயிருக்கிறார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்துள்ளது. எனவே, மனுஷன் அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி மதியற்றவர்களாய் அவைகளை நமஸ்கரித்தும் சேவித்தும் வருகிறார்கள்.

ஆனால், தேவனுடைய திட்டமோ மனுஷனை தம்முடைய சாயலாக உண்டாக்கி அவர்கள் சமுத்திரங்களையும், மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும், பூமியின் மேல் நடமாடும் சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளும்படி அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி. 1:28) எனவே, அப்போஸ்தலனாகிய பவுல் நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறார். (எபே. 6:17).

தேவன் மனுஷனை தம்முடைய மகிமைக்கென்று அவருடைய சாயலாக உண்டாக்குவது அவருடைய சித்தம் என்பதை (ஏசாயா 43:7ல்) வெளிப்படுத்தியிருக்கிறார். மனுஷர்கள் யாவரும் ஒரே விதமான சரீர அமைப்புகளை கொண்டவர்களாக இருப்பது, தேவன் ஒருவரே, அவரே சிருஷ்டி கர்த்தர் என்ற மிகப்பெரிய உண்மையை மனுகுலம் புரிந்து கொள்ள ஆணித்தரமான சாட்சியாக காணப்படுகிறது. இதை குறித்து பவுல் கூறுகிறார். பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை என்கிறார் (1கொரி. 8:6,7).


எனவே, தேவனுடைய மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கி படைக்கப்பட்டுள்ள மனுகுலம் முழுவதும் ஒருவரே தேவனென்று அறிந்து கொள்ள வேண்டும். இப்படி எல்லாரும் தேவனுடைய சந்ததியாயிருக்க மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். (அப். 17:29-30). இது தேவனுடைய திட்டம்.

இதை வாசிக்கின்ற அன்பரே நீங்களும் தேவனுடைய மகிமைக் கென்று சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதால் தேவனுடைய திட்டங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ 2:4) தேவனுடைய திட்டங்களை மேலும் அறிந்து கொள்ள மன முண்டானால் மார்க்கமும் உண்டு. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*-ஹென்றி மோகன்*

## வெளிப்படுத்தின விசேஷத்தின் 3 பிரிவுகள்

- ✡ முகவுரை மற்றும் ஏழு சபைகளுக்குரிய தரிசனம் (வெளி 1 - 3 அதி)
- ✡ சபைக்கும் உலகத்தாருக்குமான யுத்தம் (வெளி 4 - 11 அதி)
- ✡ கிறிஸ்து - சாத்தான் இடையேயான நீண்ட யுத்தம் (வெளி 12 - 22 அதி)



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

**TV PROGRAM**




Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008


திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




தமிழன் TV சனி காலை 7:15 - 7:30
தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 - 10:00
SS மியூசிக் TV திங்கள் காலை 7:00 - 7:15

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

**ஓர் இனிய செய்தி**

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன்பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555